நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதி, சூரியம்பாளையத்தில் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கழக இளைஞர் அணிச் செயலாளர், இளந்தலைவர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி கலைஞர் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 2000 நூல்களைக் கொண்டு புதியதாக அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தை நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர், நகரமைப்பு மண்டல திட்டக்குழு உறுப்பினர்எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமையில், சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. ராஜேந்திரன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பி.எஸ்.சீனிவாசன் ஆகியோர் முன்னிலையில் திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி அவர்கள் திறந்து வைத்தார். கலைஞர் நூலகம் திறப்பு விழா மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பாலாஜி மற்றும் துணை அமைப்பாளர்கள் சுந்தர், நவலடி ராஜா, ஜெகதீஸ்குமார், முரளி, கார்த்திகேயன் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் அ.சீனிவாசன், ஒன்றிய கழக செயலாளர்கள் வட்டூர் ஜி.தங்கவேல், கு.பழனிவேல், கே.செல்வராஜ், எம்.தங்கவேல், ஏ.பி.ஆர்.சண்முகம், கே.கே.சண்முகம், நகர கழக செயலாளர்கள் டி.விஜயகண்ணன், எஸ்.ஞானசேகரன், பேரூர் கழக செயலாளர்கள் எம்.ரமேஷ்பாபு, முருகன், மாவட்ட கழக அவைத்தலைவர் இரா.நடனசபாபதி, துணைச் செயலாளர்கள் வி.ஜி.அன்பழகன், கே.மயில்சாமி, எம்.சாந்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் ஓ.ஆர்.செல்வராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.பி.சாமிநாதன், பி.சிவக்குமார், எம். இந்திராணி மயில்சாமி, நகர வார்டு கழக செயலாளர்கள் எஸ்.வி.இராஜேந்திரன், கார்த்திக், நகர்மன்ற உறுப்பினர் ரமேஷ், மாதேஸ்வரன், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் முருகையன், தியாகராஜன், ரமேஷ், சாதிக்பாட்ஷா, கருணாகரன், குமார், கௌதம், ஆர்.வி..ஆர்.சரவணன், ஷேக் தாவுத், ராஜவேலு, ராஜவேல், பரசுராமன், கௌதம், சுரேஷ், ராஜ், நந்தகுமார், வேல்முருகன், இந்தியா கூட்டணி நிர்வாகிகள், திராவிடர் கழக பொறுப்பாளர்கள், நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

திருப்பெரும்புதூர் சட்டமன்ற தொகுதி வாக்குச்சாவடி நிலை முகவர்கள் மற்றும் தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர்குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்துக்கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் திருப்பெரும்புதூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஐபருல்லா, ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.டி. கருணாநிதி, நா.கோபால், பேரூர் செயலாளர் சதீஷ், ஒன்றியக் குழுத் தலைவர் சரஸ்வதி மனோகரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலினின்

தனித்துவத்தை உணர்த்தும் தீர்மானம்!

‘தினகரன்’ நாளேடு தலையங்கம்!

சென்னை. நவ.25-

“முதல்வர் மு.க.ஸ்டாலினின் தனித்துவத்தை உணர்த்தும் தீர்மானம்” என்று ‘தினகரன்’ நாளேட்டின் தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

இது குறித்து ‘தினகரன்’ நாளேட்டில் வெளிவந்துள்ள தலையங்கம் வருமாறு:-

நாடாளுமன்றத்தின் குளிர்கால கூட்டத்தொடர் இன்று (25-ஆம் தேதி) தொடங்குகிறது. வரும் டிசம்பர் 20-ஆம் தேதி வரை கூட்டம் நடக்கிறது. தமிழ்நாட்டு மக்களின் ஒட்டு மொத்த குரலாக நாடாளுமன்றத்தில் முழங்க ஆயத்தமாகி உள்ளனர் திமுகவின் எம்.பி..க்கள். இந்த கூட்டத்தொடரில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயல்பாடுகள் எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்து ஆலோசனை நடத்தி அறிவுரைகளை வழங்கியுள்ளார் தி.மு.க. தலைவரான தமிழ்நாட்டின் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

“நிதி உரிமைகளை பெறும் வகையில் உறுப்பினர்களின் பேச்சு இருக்க வேண்டும். நமது மாநிலத்தின் உரிமைக்கான குரல் என்பது மென்மையாக ஒலிக்கக்கூடாது. அதற்கு பதில் கடுமையாக சுட்டிக்காட்டி பேச வேண்டும்.” என்பது முதல்வர் வழங்கியுள்ள முக்கிய அறிவுரை. மேலும் இது தொடர்பாக முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு தீர்மானங்களும் ஆலோசனைக் கூட்டத்தில் நிறை வேற்றப்பட்டுள்ளது.

தினகரன்
நவம்பர் 24, 2024 ஞாயிற்றுக்கிழமை

தனித்துவமான தீர்மானம்

நாடாளுமன்றத்தின் குளிர்கால கூட்டத்தொடர் நாளை (25ம்தேதி) தொடங்குகிறது. வரும் டிசம்பர் 20ம்தேதி வரை கூட்டம் நடக்கிறது. தமிழ்நாட்டு மக்களின் ஒட்டு மொத்த குரலாக நாடாளுமன்றத்தில் முழங்க ஆயத்தமாகி உள்ளனர் திமுகவின் எம்.பி..க்கள். இந்த கூட்டத்தொடரில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயல்பாடுகள் எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்து ஆலோசனை நடத்தி அறிவுரைகளை வழங்கியுள்ளார் திமுக தலைவரான தமிழ்நாட்டின் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

“நிதி உரிமைகளை பெறும் வகையில் உறுப்பினர்களின் பேச்சு இருக்க வேண்டும். நமது மாநிலத்தின் உரிமைக்கான குரல் என்பது மென்மையாக ஒலிக்கக்கூடாது. அதற்கு பதில் கடுமையாக

மாநிலவாரி நிதி பகிர்வு, ஜிஎஸ்டி வரி பகிர்வு, மாநிலங்களுக்கு வரி பகிர்வு, மாநிலங்களுக்கு மானியம் வழங்குதல் உள்ளிட்ட நிதி சார்ந்த விஷயங்கள் மட்டுமல்ல, மாநிலங்களுக்கு அதிகாரம் வழங்கும் வகையில் மாநிலப் பட்டியலுக்கு அதிகாரம் கொண்ட பல விஷயங்கள் மத்திய பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளன.